மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆ. பரந்தாமன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருவாய்த்துறை அமைச்சராக இருந்த நேரத்தில் அந்த மாவட்டத்து மக்கள் அவர்களிடையே நேரிடையாக இந்தக் கோரிக்கையைத் தெரியப்படுத்தியிருக்கிறார்கள். அந்த வட்டாரத்து மக்களின் நீண்ட கால கோரிக்கையைப் பூர்த்தி செய்ய அரசு மறுபரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சென்னை மாநகராட்சியை இதுபற்றி கலந்து ஆலோசித்த பொழுது வீராணம் திட்டம் முடிவடைந்தபிறகு இதை எடுத்துக் கொள்ளலாம் என்ற கருத்து தெரிவித்திருக்கிறார்கள். விரைவிலே வீராணம் திட்டம் முடியும். இதுவும் கிடைக்கும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

Jambu Nadhi Scheme

* 576 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the preliminary works relating to the Jambu Nadhi Scheme in Tirunelveli district has been started during the year 1971; and

(*b*) the expenditure incurred on the scheme so far?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

சரபங்கா நதியின் குறுக்கே உள்ள அணை

*** 577 வினா—திரு. வீ. செல்லதுரை :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், சரபங்காநதி கிழக்காற்றில் புதிதாகக் கட்டப்பட்ட அணையை உயர்த்தி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.